செ.வெ.எண்: 09 நாள்: 9.4.2020

## காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குஅழைப்பு உதவகாத்திருக்கும் கிருஷ்ணகிரி தோட்டக்கலைத்துறை

கொரோனாவைரஸ் நோய் தடுப்பிற்காக, 144 ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில் பொதுமக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய காய்கறிகள் மற்றும் பழங்கள் போதுமான அளவு கிடைப்பதற்கு போர்க்காலஅடிப்படையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, காய்கறி மற்றும் பழப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் நலனுக்காகஅரசு கீழ்க்கண்டநடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கிருஷ்ணகிரியில் 30 ஆயிரத்து 811 ஹெக்டர் பரப்பில் பழங்களும்,17 ஆயிரத்து 142 ஹெக்டர் பரப்பளவில் காய்கறிகளும் சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது பெரும்பாலான காய்கறிகளும், பழங்களும் அறுவடைக்கு தயாராகி வருகிறது. ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள இச்சூழ்நிலையில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ, துணை இயக்குநர் அல்லது இணை இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம். இதுதொடர்பாக, விவசாயிகளுக்கு வேண்டிய வழிகாட்டுதலை வழங்குமாறு மேற்கண்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், காய்கறிகள் விற்பனையை எளிதாக்குவதற்கு, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் (TANHODA) மூலம் செயல்படும் நேரடி விற்பனைமையங்கள் மற்றும் கூட்டுப்பண்ணையத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் வாயிலாக நடமாடும் காய்கனி விற்பனை நிலையங்களை இயக்கவும், நுகர்வோருக்கு அவர்களுக்கு அருகிலேயே நேரடியாக நியாயமான விலையில் வழங்குவதற்கும் தமிழ்நாடுஅரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயிகளுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகி வேண்டிய உதவிகளைப் பெறலாம். வட்டார வாரியான தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களின் தொலைபேசி எண்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வ.எண் | வட்டாரம் | தொலைபேசிஎண் (தோட்டக்கலைஉதவி இயக்குநர்) | தொலைபேசிஎண் (தோட்டக்கலைஅலுவலர்) |
|---|---|---|---|
| 1 | கெலமங்கலம் | 9486254150 | 8098212580 |
| 2 | கிருஷ்ணகிரி | 9952901906 | 7339165526 |
| 3 | ஊத்தங்கரை | 8072376969 | 9789362321 |
| 4 | ஒசூர் | 9900170810 | 9442752271 |
| 5 | வேப்பனப்பள்ளி | 9786217220 | 6382114928 |
| 6 | தளி | 8489457185 | 9443509006 |
| 7 | காவேரிப்பட்டிணம் | 7904585531 | 9865433755 |
| 8 | சூளகிரி | 7904664726 | 9952792216 |
| 9 | மத்தூர் | 9489156103 | 6380524322 |
| 10 | பர்கூர் | 8072704544 | 9655635399 |

தமிழ்நாடு அரசு மற்றும் தோட்டக்கலைத்துறை மேற்கொண்டுள்ள இத்தகைய வாய்ப்பினை அனைத்து காய்கறி மற்றும் பழங்கள் சாகுபடி செய்யும் வேளாண் பெருமக்கள் பயன்படுத்தி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு காய்கறிகள் மற்றும் பழங்கள் எவ்வித தடையுமின்றி கிடைத்திட உதவிடுமாறு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்கிறார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.